Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, KARUR

CC No.637/2025

| | | | |
|---|---|---|---|
| | | Prosecution PW- 2 | |
| Deposition of Witness for | | Defence | |
| | | Court | |
| Name | : | ராகவன் | |
| Father's Name | : | ராஜு | |
| Village | : | | |
| Taluk | : | | |
| District | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 10.06.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கரூர் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.10.2019 ம் தேதி காலை 8.30 மணி அளவில் உதவி ஆய்வாளர் பிரபாகரன் நிலைய பொறுப்பில் இருந்த போது காளிமுத்து என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று

நிலைய குற்ற எண் 669/2019, ச/பி. 342, 294(பி),323, 506(1) இதச மற்றும் 4 of TNCEI Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **புகார் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா,ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** அன்றைய தினம் காலை 9.30 மணி அளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் அ.சா.ஆ. 4 மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்ப்படுகிறது–** பின்பு சாட்சிகள் 1 முதல் 7 வரையிலான தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 02.12.2019 ம் தேதி இவ்வழக்கின் எதிரிகளை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நிலைய பாராவசம் ஒப்புவித்தும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இத்துடன் உதவி ஆய்வாளர் தனது புலன் விசாரணையை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) இந்த வழக்கின் எதிரிகளின் மீது சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யயும் இல்லை  என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத்குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**கரூர்.**